# கடற்கரை கவியரங்கு எண் - 630

நாள் **01-10-2023**



## மனம் தெளிவோம்!

வான் நீந்தும் தாரகைகள்
வாழ்வியலைத் தான் சுட்டும்,
கோன் வழியாய் இறையவனும்,
கொடுத்த கொடை என்பர்!
வான் நீந்தும் கோள்களும்தான்
வையத்தில் நிறைதல் இயல்பே!
மீன் என்றே அவற்றையும்தான்
மேன்மையாய்த் தமிழ் சுட்டும்!

வானியலின் இயக்கத்தில் தமிழன்,
வளமான அறிவு கொண்டே,
தானியங்கி அவற்றின் பெயர் சூட்டி,
வெளிச்சத்தை வெள்ளி யாக,
மேனியதின் செம்மையாலே அதனைச்
செவ்வாய் என்று பெயரிட்டான்.
மானிடரின் வாழ்வியலில் சிந்தித்தே,
மகுடமாய் பலவும் செய்தான்!

ஆனாலும் இன்றந்த தமிழர்நிலை
தரமின்றிப் போனது காண்!
ஊனாளும் உயிர்நிலையில் அவன்
இறையைத் தான் கண்டான்!
வானாளும் கோள்களுடன்,
வானியலை தொடர்பு செய்தே,
தானாளும் அறிவு கொண்டே,
தரணியிலே வாழ்ந்திருந்தான்!

வீணான பலகதைகள் இன்று,
பலர் விருப்பமுடன் செய்கின்றார்!
காணாத காட்சிதனை நாளும்
கற்பனையாய் வளர விட்டே,
கூணாகச் சிந்தையதை என்றும்
குறுகிடத் தான் செய்கின்றார்!
நாணாதோ நல்மனந்தான் சினந்து
நானிலத்தில் காணுமொரு போராட்டமே!

மரபுவழி பெயருமிட்ட இந்த,
மாபெருமை சென்றதெங்கே காண்!
தரகுபோல் சோதிடத்தில் நாளும்
தகைவின்றி செயலும் செய்தே,
உருகிடவே பலகதைகள் இங்கு,
ஓடும்நிலையைதான் காண்கின்றோம்!
தருவாக வாழ்க்கையிதை நாளும்
தகைவுடனே நாம் கண்டிடலாம்!

அழகானச் சிந்தனைகள் மலர்ந்து,
அழகான செயல்நிலைகள் ஈந்து,
வழுவில்லா வாழ்வியலை அடைந்து,
வளமாக வாழ்வோம் நிறைந்து!
தழுவும் சோதிடமும் நம்மில்,
தகைவுடனே அறிவைச் செய்ய,
விழுதாக்கி வாழ்வியலில் நாளும்
விருப்பமுடன் பயணம் செய்வோம்!

- **கவிவளவன்** ஆகிய **கு.ப. அசோகன்**

01-10-2023 (காலை 09-15)